DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.118/2025**
Prosecution Witness P.W.19

Name : **திரு.இளங்கோவன்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் 1, 4 ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 06.04.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தேவாரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.11.2024 ஆம் தேதியன்று காலை 5.30 மணிக்கு உத்தமபாளையம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்து நிலைய பொறுப்பில் இருந்த போது கம்பம், வார்டு-4, மாலையம்மாள் புரத்தில் குடியிருக்கும் அய்யாதுரை மகன் நாகபாலன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று உத்தமபாளையம் காவல் நிலையம் குற்ற எண் 351/2024, சட்டப்பிரிவுகள் 61(2), 54, 103 BNSS ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து இவ்வழக்கானது கொலை வழக்கு என்பதால் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை துரித தபால் மூலம் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு உத்தமபாளையம் பெண் தலைமை காவலர் திருமதி.வேலம்மாள் 1892 ஆகியோர்கள் மூலமாக அனுப்பி வைத்தேன்.

2. இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். புலன் விசாரணை அதிகாரியான உத்தமபாளையம் காவல்

ஆய்வாளர் அவர்களுக்கு அன்றைய தினம் காவல் நிலையத்தில் வைத்து காலை 6.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலை கொடுத்தேன். காவல் ஆய்வாளர் அதைப் பெற்றுக் கொண்டு என்னை விசாரணை செய்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.22.

<u>**எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. என்னிடம் கொடுத்த புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த புகாரில் எத்தனை பக்கங்கள் இருந்தது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். தற்போது நான் வழக்குக்கோப்பை பார்த்து அது பற்றிய விபரங்களை குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். இந்த புகார் வருவதற்கு முன்பே எங்கள் காவல் எல்லைக்குட்பட்ட பகுதியில் இறந்து போன பிரேதம் இருந்தது தொடர்பான விபரம் எங்கள் காவல் நிலையத்திற்கு வந்ததா என்றால் தகவல் எதுவும் வரவில்லை.

2. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், சம்பவம் நடந்த இடத்தில் 03.30 மணிக்கு மூன்று போலீசார் எங்கள் காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு இந்த வழக்கு சம்பந்தமாக உண்மையிலேயே தகவல் கிடைத்திருந்தால் அது பற்றிய விபரங்களை பாரா பதிவேட்டில் குறித்து வைத்திருப்பேன் என்றால் சரியல்ல.

3. சம்பவயிடத்திற்கு செல்லாமல் எப்படி இந்த வழக்கு கொலை வழக்கு என்று நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால், பிடிக்கக்கூடிய குற்றமாக புகார் வரும் பட்சத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வோம். பொதுவாக யார் புகார் கொடுத்தாலும் சம்பவ இடத்திற்கு செல்லாமல் நாங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வோமா என்றால் பிடிக்கக்கூடிய குற்றமாக இருக்கும் பட்சத்தில் முதல் தகவல் அறிக்கை சம்பவ இடத்திற்கு செல்லாமலேயே பதிவு செய்வோம். ஆய்வாளர் விசாரணையில் புகார் பற்றிய

விபரமோ எதிரி யார் என்ற விளக்கமோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆய்வாளர் பார்வைக்கு எத்தனை மணிக்கு நான் வைத்தேன் என்றால் 17.11.2024ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை அவரிடம் கொடுத்தேன். மேற்கண்ட விபரத்தையும் நான் வழக்கு கோப்பை பார்த்து குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது 22.15 மணிக்கு நடைபெற்றது என்று நான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 22.15 மணியிலிருந்து 22.30 மணிக்குள் சம்பவம் நடந்தது என்று நான் குறிப்பிட்டுள்ளேன்.

5. எந்த கண்ணுற்ற சாட்சியும் குறிப்பிட்ட நேரத்தில் சம்பவம் நடந்ததாகவோ, நேரடியாக பார்த்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தனக்கு சம்பவம் குறித்து 3:35 மணிக்கு தான் தெரியவந்தது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லிய பட்சத்தில் சம்பவம் 03.35 மணிக்கு நடைபெற்றதாகத்தான் முதல் தகவல் அறிக்கையில் சொல்லி இருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

6. முன்னுக்கு பின் முரணாக நான் முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நேரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பைனான்ஸ் சம்பந்தமாக தனது தம்பி இரண்டு லாரிகள் வாங்கி இருந்ததாக புகார்தாரர் சொல்லியிருந்தார் அந்த லாரிகளின் எண்களை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் புகாருடன் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த லாரிகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பான ஆவணங்களையும் புகாருடன் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

7. 10.15 மணிக்கு நாகபாலன் என்பவரது தனது தம்பி மனைவி வீட்டில் இருந்தார் என்று குறிப்பிட்டுச் சொல்லி உள்ளார். இறந்தவர் வீட்டிலிருந்தால்

22.15 மணிக்கு சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்றால் 22.15 மணியிலிருந்து 22.30 மணிக்குள் தான் சம்பவம் நடைபெற்று உள்ளது. எதிரிகளின் கைபேசி எண்ணை அந்த புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் ரூ. 4 லட்சம் கடன் தான் தனது தம்பி கொடுத்திருந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. தனது தம்பி நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்திருப்பதாக அந்த புகாரில் கொடுக்கப்பட்டுள்ளது அது சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் புகாருடன் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார்தாரர் 8.00 மணிக்கு தான் புகார் கொடுத்துள்ளார் என்று சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக புலன் விசாரணை அதிகாரிக்கு புலன் விசாரணையில் நான் உதவியாக இல்லை என்றால் சரிதான்.

9. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் பணியில் இருந்து தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் ஆய்வாளர் விசாரணையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் உதவியுடன் பிரேதம் எடுத்துச் செல்லப்பட்ட விபரம் புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். கம்பம் காவல் நிலையத்தில் எதிரி சரணடைந்தது தொடர்பான விபரம் எதுவும் எனக்கு தகவல் கிடைத்ததா என்றால் எனக்கு அது பற்றிய விவரங்கள் எதுவும் ஞாபகம் இல்லை.

<u>**4 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

10. புகாரிலும் முதல் தகவல் அறிக்கையும் 4–ம் எதிரி குறித்த விபரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இரவிலிருந்து இருந்து காவல் நிலையத்தில் பணியில் இருப்பவர்கள் தான் மறுநாள் காலை 5.30 மணிக்கு காவல் நிலையத்தில் பணியில் இருப்பார்கள் என்றால் சரியல்ல. காலையில் 8 மணியிலிருந்து 9 மணிக்குள் தான் காவல் நிலையத்திற்கு பணிக்கு ரோல் கால் பணிக்கு வருவோம் என்றால் சரியல்ல.

11. நான் இரவு நேரம் பணியிலிருந்து இருந்தால் பீட் புத்தகம் பராமரிக்க வேண்டும் என்றால் நான் இரவு காவல் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்தேன் என்பதால் எனக்கு பீட் புத்தகம் கிடையாது. நான் அன்றைய தினம் இரவு நேரம் காவல் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக இருந்தது தொடர்பான ஆவணங்கள் எதையும் ஆய்வாளர் விசாரணையில் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே இந்த வழக்கின் முதல் எதிரி காவல் நிலையத்தில் சரண்டராக இருக்கும் பட்சத்தில் அவரிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலமோ அல்லது காவல் நிலையத்தில் பாரா புத்தகமோ அல்லது பதிவேட்டையோ நான் வாங்கினேனா என்றால் அவ்வாறு வாங்கவில்லை.

12. ஒரு கொலை வழக்கில் ஒரு எதிரி காவல் நிலையத்தில் சரண் அடைந்தால் அது பற்றிய விவரங்கள் எல்லா காவல் நிலையத்திற்கு வாக்கி டாக்கியில் அனுப்புவார்கள் என்றால் சரிதான். நான் இரவு நேரம் காவல் நிலையத்தில் பணியில் இருந்திருந்தால் எதிரி சரணடைந்த விபரம் எனக்கு தெரிந்து நான் உடனே அவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், நான் அன்றைய தினம் இரவு பணியில் இல்லாத காரணத்தினால் தான் பேர் சொன்ன விபரங்கள் எதுவும் நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

13. எத்தனை மணிக்கு எங்கள் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சம்பவம் நடந்தது என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால் புகார் காலை 05.30 மணிக்கு கிடைக்கப்பெற்றது அப்பொழுதுதான் சம்பவம் நடந்த விபரம் நான் தெரிந்து கொண்டேன். நான் சொன்ன நேரத்தில் காவல் நிலையத்தில் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகாரை வேறொரு நபர் புகார் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் இந்த விபரங்கள் குறித்த விபரங்கள் எனக்கு எதுவும் தெரியவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.06 17:40:53 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.